**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19 ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.18/2017**

**இ.ம.எண்.07/2025**

1) வேல்குமார்

2) கிருஷ்ணகுமாரி ...**மனுதாரர்கள்/வாதிகள்**

**/எதிர்/**

1) பெருமாள்

2) செல்வம்

3) செந்தில்

4) இராமசாமி (இறப்பு)

5) முருகேசன்

6) வீரபத்திரன்

7) மணி ..**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு எனது முன்னிலையில் இன்று 08.01.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.விஜயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் மற்றும் உத்தேச தரப்பினர் எண். 1 மற்றும் 2 ஆகியோர் தரப்பிலும் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

<u>**உத்தரவு**</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22, விதி 4ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இறந்து போன 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை மேற்படி வழக்கில் 8 மற்றும் 9ம் பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**மனுதாரர்கள் மனுவின் சுருக்கம்:**</u>

**2)** மனுதாரர்கள் மேற்படி வழக்கில் வாதிகள் ஆவார்கள். மேற்கண்ட வழக்கில் 4ம் பிரதிவாதி ராமசாமி, வழக்கு நிலுவையில் இருக்கும் சமயம் கடந்த 11.07.2025 அன்று இறந்துவிட்டார். இறந்து போன 4ம் பிரதிவாதிக்கு வாரிசுகளாக அவருடைய மனைவி ராஜம்மாள், மகன் முருகேசன், மகள் அம்மனி (எ) அக்கம்மாள், மகன்கள் வீரபத்திரன், மணிகண்டன் ஆகியோர் உள்ளார்கள். மேற்சொன்ன நபர்களில் முருகேசன், வீரபத்திரன் மற்றும் மணிகண்டன் ஆகியோர் மேற்படி வழக்கில் ஏற்கெனவே 5 முதல் 7 வரையான பிரதிவாதிகளாக உள்ளார்கள்.

**3)** மேலே கண்ட நபர்கள் இறந்து போன 4 ம் பிரதிவாதியின் சொத்துக்களை அடைந்து அனுபவித்து வருகிறார்கள். மேலே கண்ட நபர்களை தவிர இறந்து போன 4ம் பிரதிவாதிக்கு இதர வாரிசுகள் யாரும் கிடையாது. எனவே, மனுவில் குறிப்பிட்டுள்ள உத்தேச வாரிசுதாரர்களை மேற்படி வழக்கில் 8 மற்றும் 9 ம் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியுள்ளது. அவர்களை பொறுத்து இந்த வழக்கில் தொடர் வழக்கு மூலம் ஏற்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை அனுமதிக்க வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாக உள்ளது.

**<u>எதிர்மனுதாரர்கள் மற்றும் உத்தேச தரப்பினர் எண்.1 மற்றும் 2 ஆகியோர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>**

**4)** மனுதாரர்களின் இம்மனு சட்டப்படி செல்லாது. அது நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்களுக்கு மனுவில் கண்ட பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல. எதிர்மனுதாரர்கள் நேரிடையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற கூற்றுகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். இம்மனுவில் எவ்வித முகாந்திரமும், காரணமும் இல்லை. எனவே, இம்மனுவை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**5)** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**6)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை. ஆவண சாட்சியங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**7)** வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் மேற்கண்ட வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிகிறது. மேலும், கடந்த 28.07.2025 அன்று பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் 4ம் பிரதிவாதி கடந்த 11.07.2025 அன்று இறந்துவிட்டதாக கூறி குறிப்பாணை ஒன்று தாக்கல்

செய்திருப்பது தெரிகிறது. அதனைத் தொடர்ந்து, இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால் இறந்து போன 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை மேற்படி வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8)** மனுதாரர்கள் தரப்பில் 4ம் பிரதிவாதி கடந்த 11.07.2025 அன்று இறந்து விட்டார் என்றும், இறந்து போன 4ம் பிரதிவாதிக்கு அவரது மனைவி ராஜம்மாள், மகள் அம்மனி (எ) அக்கம்மாள் மற்றும் மகன்கள் முருகேசன், வீரபத்திரன், மணிகண்டன் ஆகியோர் உள்ளதாகவும், அவர்களை தவிர வேறு வாரிசுகள் யாரும் இறந்து போன 4ம் பிரதிவாதிக்கு இல்லை என்றும், 4ம் பிரதிவாதியின் சொத்துக்களை மேற்படி அவரது வாரிசுகளே அடைந்து அனுபவித்து வருவதாகவும், எனவே, இறந்து போன 4ம் பிரதிவாதியின் இதர வாரிசுகளை மேற்படி வழக்கில் 8 மற்றும் 9ம் பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

**9)** மாறாக, எதிர்மனுதாரர்கள் மற்றும் உத்தேச தரப்பினர் எண்.1 மற்றும் 2 ஆகியோர் தரப்பில், மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள காரணம் சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுவில் கோரியுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டுமென்றும், இம்மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்று கூறி இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**10)** இவ்வாறு இருக்கையில், இம்மனுவில் உள்ள உத்தேச தரப்பினர் எண்.1 மற்றும் 2 ஆகியோர் இறந்து போன 4ம் பிரதிவாதியாகிய ராமசாமியின் மனைவி மற்றும் மகள் ஆவார்கள். எனவே, இறந்து போன 4ம் பிரதிவாதிக்கு உத்தேச தரப்பினர்கள் வாரிசுதாரர்கள் என்பதால் இறந்து போன 4ம் பிரதிவாதியின் சொத்துக்களைப் பொறுத்த உரிமையானது, உத்தேச தரப்பினர் எண். 1 மற்றும் 2 ஆகிய நபர்களையும் கட்டுப்படுத்தும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

மேலும், மேற்படி இறந்து போன 4ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்றும், தாவா சொத்துக்களைப் பொறுத்து நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் உத்தரவானது 4ம் பிரதிவாதியின் வாரிசுகளையும் கட்டுப்படுத்தும் என்பதாலும், இறந்து போன 4ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களைப் பொறுத்து மேற்படி வழக்கில் தொடர் வழக்குமூலம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இறந்து போன 4ம் பிரதிவாதியின் வாரிசுகளான உத்தேச தரப்பினர்களான அவரது மனைவி மற்றும் மகளை, மேற்கண்ட வழக்கில் 8 மற்றும் 9ம் பிரதிவாதிகளாக சேர்க்க இந்நீதிமன்றம் நீதியின் பொருட்டு முடிவு செய்துள்ளது.

**முடிவு:**

முடிவாக, மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. 1 மற்றும் 2ம் உத்தேச தரப்பினர்களை மேற்படி வழக்கில் 8 மற்றும் 9ம் பிரதிவாதிகளாக சேர்க்க இதன்மூலம் உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.01.19 16:00:40 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.01.19 16:00:57 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**